Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
STC No.2015/2022 Date:25.06.2025
Deposition of witness for prosecution: PW4 ( LW10 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.பக்கீர் முகமது | Age | 53/2025 |
| Father/ Husband Name | பக்கீர் மீரான் | Calling | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Village | குமுளி | Taluk | உத்தமபாளையம் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 26.05.2025 TIME **PM**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :-**

நான் தற்போது குமுளி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.04.2022 ம் தேதி 17.00 மணிக்கு ஓடைப்பட்டி காவல்நிலைய சிறப்பு சாா்பு ஆய்வாளர் நிலையப் பொறுப்பிலிருந்தபோது, தேனி அரசு மருத்துவமனயில் இருந்து வந்த தகவலை பெற்று அங்கு சென்று,இ சிகிக்சையில் இருந்த நல்லதேவர் மகன் ஜெகதீஸ்வரன் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தை பெற்று பின்னர் நிலையம் வந்து புகாரின் தன்மைக்கேற்ப எதிரி மீது இ.த.ச. பிரிவு 279, 337 இதச கீழ் குற்ற எண் 61/22 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். வழக்கு கோப்பை விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் சொல்வது போல் அ.சா.1 என்னிடம் புகார் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 என்னிடம் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் எதிரியின் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடாத சங்கதியை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டது தவறு என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

ஒம்/திரு.P.காமராசு
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
STC No.1819/2022 Date: 20.05.2025
Deposition of witness for prosecution: PW2 ( LW2 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. சகுபர் சாதிக் | Age | 32 /2025 |
| Father/ Husband Name | அப்துல் ரகுமான் | Calling | தனியார் மருத்துவமனையில் |
| Village | உத்தமபாளையம் | Taluk | உத்தமபாளையம் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 20.05.2025 TIME 01.00 **PM**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

அ.சா.1 எனது அண்ணன் ஆவார். கடந்த 12.08.2021-ம் தேதி நான் இரவு 07.30 மணியளவில் கம்பத்தில் வேலையை முடித்துவிட்டு என்னுடன் பணிபுரிந்த சையது அலிபாத்திமாவும் வந்தார். நாங்கள் இருவரும் எனது இருசக்கர வாகனமான TN 60 AX 6097 பதிவெண் கொண்ட Honda Activa வில் உத்தமபாளையம் காவலர் குடியிருப்பு அருகே வந்து கொண்டிருந்த போது எங்களுக்கு எதிர்திசையில் TN 60 7907 என்ற பதிவெண் கொண்ட CT 100 பைக்கில் ஆஜர் எதிரி வேகமாக வந்து எனது இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். அதில் எனக்கு வலது புறம் தோள்பட்டையிலும், இடது காலில் காயம் ஏற்பட்டது. எனக்கு பின்னால் அமர்ந்து வந்த சையதுஅலி பாத்திமாகவுக்கு உடலின் இடது புறம் முழுவதும் காயம் ஏற்பட்டது. எங்களை தெளபிக் ஆட்டோ மூலம் உத்தமபாளயைம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார். மருத்துவர்கள் பரிசோதனைசெய்துவிட்டு என்னை மேல் சிகிச்சைக்காக தேனி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கே 4-5 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எதிரி ஆஜராகி இருந்த போதிலும் குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

ஓம்/திரு.P.காமராசு
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
STC No.1819/2022 Date: 20.05.2025
Deposition of witness for prosecution: PW3 ( LW3 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. சையது அலி பாத்திமா | Age | 48 /2025 |
| Father/ Husband Name | சுல்தான் | Calling | சமையல் |
| Village | உத்தமபாளையம் | Taluk | உத்தமபாளையம் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 20.05.2025 TIME 01.10 **PM**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :-**

அ.சா.1,2 எனது அண்ணன் மகன்கள் ஆவார்கள். கடந்த 12.08.2021-ம் தேதி நான் இரவு 07.30 மணியளவில் கம்பத்தில் வேலையை முடித்துவிட்டு நான் எனது அண்ணன் மகன் சகுபர்சாதிக் அவரது இருசக்கர வாகனத்தில் கம்பத்தில் இருந்து உத்தமபாளையத்திற்கு வந்து கொண்டிருந்த போது, உத்தமபாளையம் காவலர் குடியிருப்பு அருகே வந்து கொண்டிருந்த போது எங்களுக்கு எதிர்திசையில் பைக்கில் ஆஜர் எதிரி அதிவேகமாக வந்து நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். அதில் சகுபர்சாதிக்கு வலது புறம் தோள்பட்டையிலும், இடது காலில் காயம் ஏற்பட்டது. எனக்கு உடலின் இடது புறம் முழுவதும் காயம் ஏற்பட்டது. தோள்பட்டைடயில் அடிப்பட்டு தற்போது வரை என்னால் எனது இடது கையை மேலே துக்கயியலாது. மேலும் எனது இடது கால் முட்டியை மடக்கயியலாது. எங்களை அ.சா.1-ன் நண்பர் ஒருவர் ஆட்டோ மூலம் உத்தமபாளயைம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார். மருத்துவர்கள் பரிசோதனை செய்துவிட்டு என்னை மேல் சிகிச்சைக்காக தேனி அரசு மருத்துவமனைக்கு போகச்சொன்னார்கள். மருத்துவமனையில் என்னை பார்த்துக்கொள்ள ஆட்கள் யாரும் இல்லாததால் நான் உத்தமபாளையம் அரசு மருத்ததுவமனையிலேயே 4-5 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எதிரி ஆஜராகி இருந்த போதிலும் குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

ஒம்/திரு.P.காமராசு
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்